<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.754/2019</u>

2021–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :தேவகி | தொழில் | : |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :முத்துசாமி | வட்டம் | :குன்னம் |
| கிராமம் | :மருவத்தூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | :47/2021 |

**முதல் விசாரணை**

நான் மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். 22.10.1963ம் தேதி வாதியின் தகப்பனார் ரெங்கசாமி, ராமசாமி உடையார் வகையறாவிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திம் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆகவும், 28.07.2009ம் தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து 1ம் பிரதிவாதி சின்னம்மாள் மற்றும் ராமசாமி ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கணினி சிட்டா சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்தை பொறுத்து 01.01.1925 முதல் 31.12.1966 வரையிலான காலகட்டத்திற்கு உண்டான வில்லங்க சான்றிதழ் **பி.சா.ஆ.3** ஆகவும், 09.03.2021ம் தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து கலியமூரத்தி என்பவர் பெயரில் உள்ள கணினி சிட்டாவின் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **பி.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.